பொருளடக்கம்

பாகம் 1

1 அகதிகளுடன் சேர்ந்துகொண்ட அரசர் சரித்திரம் 13

வலி: 1 19

வலி: 2 20

வலி: 3 21

வலி: 4 21

2 பரிசுத்தரின் பாதங்களைக் கழுவ மகாராஜாவுக்கு வந்த பேராசை 28

சாட்சி: 1 33

சாட்சி: 2 35

சாட்சி: 3 36

3 மக்கா மைல்கற்கள் 42

1 ஸஃபா மலை பிரகடனம் 43

2 சத்தியத்தை முடக்க சதிகள் 54

3 குறைஷிகளின் கொலைவெறி 59

4 மதீனா மைல்கற்கள் 64

1 மதீனா பள்ளிவாசல் 68

2 புதுமைச் சகோதரர்கள் 69

3 படையெடுக்கும் குறைஷிகள் 71

4 உஹுது களத்தில் சோதனை 74

5 நெருங்க விடாத குழி வெட்டிய யுத்தம் 79

6 சமாதான ஒப்பந்தம் 81

7 மக்கா வெற்றி 85

8 இறுதி நபியின் இறுதிக் காலம் 91

பாகம் 2

1 இவ்வளவு பரிசுத்தமான முன்மாதிரியா! 111

சுகாதார வாழ்வுக்குச் சூத்திரம் சொன்னார்கள் 114

ஆண்களுக்கும் ப்யூட்டி டிப்ஸ் சொன்னார்கள் 115

வாய்மையுடன் வாய் சுத்தமும் வலியுறுத்தினார்கள் 118

தூய்மையின் தனித்தன்மை தெரிவித்தார்கள் 119

2 இவ்வளவு கவர்ச்சியான முன்மாதிரியா! 124

தலைமுடியிலும் கவனம் செலுத்தினார்கள் 126

ஆடை குறித்தும் அறிவுரை சொன்னார்கள் 127

அரவாணித்தனத்தை அதட்டினார்கள் 132

காலணி அணிகிற நாகரிகம் சொன்னார்கள் நபிகள் 137

3 இவ்வளவு ஆரோக்கியமான முன்மாதிரியா ! 139

டோஸ்: 1 139

டோஸ்: 2 139

டோஸ்: 3 140

தற்காப்பு கலைகளில் ஆர்வமூட்டினார்கள் 143

மருந்து உட்கொள்ள ஏவினார்கள் 146

4 இவ்வளவு கலகலப்பான முன்மாதிரியா ! 148

புன்னகை பூக்கச் செய்வார்கள் 151

கசப்பான மனிதனிடமும் இனிப்பாகப் பேசினார்கள் 153

குழந்தைகள்மீது கருணை கொண்டார்கள் 156

5 இவ்வளவு நேர்த்தியான முன்மாதிரியா! 160

கேள்வி 1: நபிகளார் வீட்டில் நடந்துகொள்ளும் விதம் எப்படி? 161

கேள்வி 2: நபிகளார் வெளியிடங்களில் எப்படி நடந்துகொள்வார்கள்? 163

கேள்வி 3: நபிகளாரின் சபை எப்படி இருக்கும்? 165

கேள்வி 4: நபிகளார் தம் நண்பர்களுடன் எப்படி நடந்துகொள்வார்கள்? 167

சுபாவம் அறிந்து பழகினார்கள் 168
மக்களுக்கு நற்பணிகள் செய்தார்கள் 170
பலவீனத்தை மறைக்காத பண்பாளர் 172
புகழ்ச்சிகளை விரும்பாத புதுமையாளர் 174
ரொம்ப சிம்பிளாக இருந்தவர்கள் 177

6 இவ்வளவு நன்றியுள்ள முன்மாதிரியா! 182

7 இவ்வளவு நேசமான முன்மாதிரியா! 191
உண்மையான உதாரண புருஷர் 199
டேக் இட் ஈஸி; பீ கேர்ஃபுல் – இரண்டையும் போதித்தார்கள் நபிகள் 200
நபிகளாரும் அவர்களின் மனைவிகளும் 204
விவேகமாக நடந்தார்கள் நபிகள் 212
சின்னச் சின்ன ஆசைகளையும் நிறைவேற்றினார்கள் 213
சிரித்து விளையாடினார்கள் 215
செல்லமாக நடந்துகொண்டார்கள் 218
ஊட்டிவிடச் சொன்னார்கள் 224
செலவு செய்யச் சொன்னார்கள் 225
தேவையைப் பூர்த்தி செய்யச் சொன்னார்கள் 226
இரகசியம் காத்திடச் சொன்னார்கள் 227
உதவச் சொன்னார்கள் 227
கண்ணீர் துடைத்தார்கள் 228
கோப தாபம் புரிந்து நடந்தார்கள் 229
ஆலோசனை கேட்டார்கள் 230
மனைவியின் சொந்தங்களை, தோழிகளை மதித்தார்கள் 231
பாராட்டினார்கள்; குறை பேசமாட்டார்கள் 233
அன்பை, அக்கறையை வெளிப்படுத்தினார்கள் 235

8 இவ்வளவு அழகிய முன்மாதிரியா! 240
திகைக்க வைக்கும் எளிமை 244
சொன்னதைச் செய்தார்கள் 245
இறுதியாக ஒரு செய்தி 251

1

அகதிகளுடன் சேர்ந்துகொண்ட அரசர் சரித்திரம்

*

- ஆரம்பக் கால முஸ்லிம்கள் இஸ்லாமுக்காக செய்த தியாகப் பயணம்
- அகதிகளாய் எத்தியோப்பியா போனபோதும் மன்னர் அவையில் நபிகளாரின் மார்க்கம் பற்றி நபித்தோழரின் அருமையான பேச்சு
- எதிரிகளின் கொடுமைகளுக்கு அஞ்சாத கொள்கை உறுதி
- மன்னரும் முஸ்லிமான மகத்தான திருப்பங்கள்

'அரசே! நாங்கள் அறியாமைக் காலத்தில் கிடந்தோம்; சிலைகளை வணங்கினோம்; செத்த பிராணிகளைச் சாப்பிட்டோம்; மானக்கேடுகள் செய்தோம்; சொந்தங்களைத் துண்டித்தோம்; பக்கத்து வீட்டாருக்குக் கெடுதிகள் ஏற்படுத்தினோம்; வசதியுள்ளவர்கள் எங்களில் பலவீனர்களை அழித்து வந்தார்கள். இப்படியே வாழ்ந்து வரும்போதுதான் எங்களில் ஒருவரையே அல்லாஹ்[1] எங்களுக்குத் தூதராக அனுப்பினான். அவரின் வமிசத்தையும், அவர் உண்மையாளர், நம்பகமானவர், மிகவும் ஒழுக்கமானவர் என்பதையும் நாங்கள் நன்கு அறிவோம்.

- அல்லாஹ் ஒருவனையே நாங்கள் வணங்க வேண்டும்;
- எங்கள் முன்னோர்களும் நாங்களும் வணங்கி வந்த கற்சிலைகள், புனித ஸ்தலங்கள் இவற்றிலிருந்து விலக வேண்டும்;

1 அல்லாஹ் – ஏக இறைவனின் மகத்தான பெயர். இறைவனைக் குறிக்க அறபுகளில் எல்லா மதத்தவரும் பயன்படுத்தும் பொதுவான பெயர்.

2

பரிசுத்தரின் பாதங்களைக் கழுவ மகாராஜாவுக்கு வந்த பேராசை

✳

- பிறப்பு, வளர்ப்பு, வாலிபம், வியாபாரம், திருமணம், சமுதாய சேவை, இறைநினைவு — நபிகளாரின் முதல் நாற்பது வயது வரையிலான வாழ்க்கை
- நாற்பதாம் வயதில் ஒரு மகத்தான திருப்பம்; நபியானார்கள் நபிகளார்.
- நபியாகும் முன்பு வாழ்ந்த அவர்களின் அப்பழுக்கற்ற வாழ்வே அவர்கள் நபிதான் என்பதற்கு ஆதாரம்.

قُلْ لَوْ شَاءَ اللهُ مَا تَلَوْتُهُ عَلَيْكُمْ وَلَا أَدْرَاكُمْ بِهِ فَقَدْ لَبِثْتُ فِيكُمْ عُمُرًا مِنْ قَبْلِهِ أَفَلَا تَعْقِلُونَ

'அல்லாஹ் நினைத்திருந்தால், நான் இந்தக் குர்ஆனை உங்களுக்கு ஓதிக்காட்டியிருக்கவும்மாட்டேன். அவன் உங்களுக்கு இதனை அறிவித்திருக்கவும்மாட்டான். நிச்சயமாக நான் இதற்கு முன்பு நீண்ட காலம் உங்களோடு வாழ்ந்திருக்கிறேனே.. சிந்திக்க மாட்டீர்களா?' என்று (நபியே!) கேளுங்கள். (குர்ஆன் 10:16)

நபிகளார் ﷺ நபியாகுவதற்கு முந்திய நாற்பது வருட வரலாறு இந்த வசனத்தில் சுருங்கியுள்ளது. 'எனக்கு அல்லாஹ்விடமிருந்து செய்தி வருகிறது... நான் அவனுடைய தூதர். என்னைப் பின்பற்றுங்கள்' என்று நபிகளார் ﷺ தம் ஊர்வாசிகளை அழைத்தபோது, அந்த மக்கள் அதை ஏற்கத் தயாரில்லை.

சந்தேகம். வரட்டுப் பிடிவாதம். ஜீரணிக்க முடியாமல் இருந்தார்கள் அவர்கள். நாளுக்கொரு சிலை வீதம் வருடம் முழுக்க 360 சிலை

களை வணங்கிக்கொண்டிருப்பவர்களிடம், 'அல்லாஹ்வையே வணங்குங்கள்; இந்தச் சிலைகளை அவனுக்கு இணையாக்காதீர்கள்' என்றால் எப்படியிருக்கும்? 'இல்லை.. உங்களை நம்பமாட்டோம்' என்று சொல்லிவிட்டார்கள். இத்தோடு நிறுத்திக்கொள்ளவில்லை. பைத்தியம், பொய்யர், சூனியக்காரர், கவிஞர் என்றெல்லாம் திட்டித் தீர்த்தார்கள். பார்வையிலேயே வீழ்த்துவதைப்போல் குரோதமாகப் பார்த்தார்கள். கேலிசெய்தார்கள். குத்திப் பேசினார்கள்.

இதில் ஆச்சரியம் என்னவெனில், இதே மக்கள்தான் கொஞ்ச காலத்திற்கு முன்பு வரை நபிகளாரை ஒரு மாமனிதராக, உண்மையாளராக, நம்பகமானவராக, நீதிமானாக மதித்து வந்தவர்கள். அவர் பொய்பேசியதாக அவர்கள் கேள்விப்பட்டதுகூட இல்லை. இச்சமயத்தில்தான் நபிகளாரின் ஆரம்பக் காலத்து வாழ்வையே ஓர் ஆதாரமாக்கி, அவர் நபியே என்பதில் அறவே சந்தேகமில்லை என்று சிந்திக்க வைக்கிறான் அல்லாஹ்.

'அட, இவ்வளவு காலம் உங்களோடு வாழ்ந்திருக்கிறேனே.. எப்போதாவது என்னைப் பொய்யனாக கண்டதுண்டா? எனது பரிசுத்த வாழ்க்கையைச் சந்தேகித்ததுண்டா? அப்போதெல்லாம் என்னை நம்பிய நீங்கள், இப்போது என்னை மறுப்பது எந்த விதத்தில் நியாயம்? சிந்தித்துப் பாருங்கள்...' — மறுக்க முடியாத இந்த வாதத்திற்கு மக்காவாசிகளிடம் பதிலே இல்லை.

கி.பி. 571.


அறபு தேசத்தில் மக்கா மாநகரில் அப்துல்லாஹ், ஆமினா தம்பதியருக்கு முஹம்மது ﷺ பிறந்தார்கள். குறைஷி கோத்திரம். ஹாஷிம் குடும்பம். இவர்கள் அறபுலகத்தில் பிரபலம். ஏனெனில், ஆன்மிகத் தலைமையே இவர்களிடம்தான். நபி இப்றாஹீம் ﷺ, இஸ்மாயீல் ﷺ கட்டிய கஅபா பள்ளிவாசலின் பரம்பரை நிர்வாகிகள் இவர்கள். ஆண்டுதோறும் இந்தப் பள்ளிவாசலை ஹஜ்ஜ்[6] செய்ய வருகின்ற யாத்திரிகர்களுக்கு குருக்கள் இவர்கள். இப்படிப்பட்ட குடும்பத்தில்

---

6 ஹஜ்ஜ் – மக்காவின் கஅபா பள்ளிவாசலுக்கு ஆயுளில் ஒரு தடவையேனும் செல்கிற புனித யாத்திரை

தடவை குறைஷிகள் மத்தியில் பிரச்சினை ஒன்று முளைத்தது. நபிகளாருக்கு அப்போது சுமார் 35 வயது.

வெள்ளத்தால் சேதாரமடைந்த கஅபா பள்ளிவாசலுக்குக் கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டிருந்தன. கோத்திரக்காரர்கள் ஒவ்வொருவரும் அக்கறையோடு வேலை செய்தார்கள். புதுப்பித்துக் கட்டினார்கள். இறுதியில் ஹஜ்ருல் அஸ்வத் எனும் கல் வைக்கின்ற இடம் வந்தது. அஸ்வத் - கருப்பு, ஹஜ்ர் - கல், அது ஒரு கருப்புக் கல். சொர்க்கத்து கல். புனிதமாக, பத்திரமாக காத்தார்கள் குறைஷிகள். அதை யார் வைப்பது? ப்ரஸ்டீஜ் பிரச்சினை.



3

மக்கா மைல்கற்கள்

ஆரம்பம் முதல் அதிர்வுகள் வரை

*

- முதல் மூன்று வருடங்கள் இரகசியப் பிரச்சாரம்
- பகிரங்கப் பிரசாரத்தால் எதிரிகள் கட்டவிழ்த்த கொடுமைகள்
- அச்சுறுத்தி, ஆசை காட்டி, பேரம் பேசி நபிகளாரின் சீர்திருத்தப் பணியை முடக்குவதற்கு நடந்த தந்திரங்கள்
- ஊர் விலக்கம் செய்யத் தொடங்கி இறுதியில் உலகைவிட்டே விலக்குவதற்கு நடந்த சூழ்ச்சிகள்
- மதீனா நோக்கி நபிகளாரின் வெற்றிப் பயணம்

நபியாகி கிட்டத்தட்ட 13 வருடங்கள், மக்கா வாழ்க்கை. பிரச்சாரம் சூடுபிடித்தவுடன் கஷ்டங்களும் சோதனைகளும் நபிகளாரை உலுக்கித் தள்ளின. ஆனால், அவர்கள் உறுதிகுலையவில்லை. அலைந்து திரிந்து அடிபட்டு விழுந்து எழுந்து தொடர்ந்து பிரச்சாரம். ஆரம்பத்தில் மூன்று ஆண்டுகள் இரகசியப் பிரச்சாரம். நம்பகமான நெருங்கிய நட்பு வட்டாரத்தில் மட்டும் செய்தி பரவிக்கொண்டிருந்தது. அடுத்து, பகிரங்கப் பிரச்சாரம். சொந்தங்களை விருந்துக்கு அழைத்து கொஞ்சம் பேசிப் பார்த்தார்கள் நபிகளார். பெரிய தந்தை அபூலஹப் ஆணவத்தில்குதித்தான். சபையைக் கெடுத்தான். ஆனால், இன்னொரு பெரிய தந்தை அபூ தாலிப் ஆதரவுதந்தார். அவர் முஸ்லிமாகவில்லை என்றாலும் பிரசாரத்திற்குப் பாதுகாப்பு உத்திரவாதம் தந்தார். அப்புறமென்ன? தொடங்கியது வீரியமான பிரச்சாரம். தொடர்ந்தது வேதனையான காலம்.

மைல்கற்கள் ஆரம்பம்...

1

ஸஃபா மலை பிரகடனம்

✳

ஸஃபா மலை உச்சி.

நபிகளார் ﷺ கூக்குரலிட்டார்கள். யா ஸபாஹா! யா ஸபாஹா! ஆபத்து! ஆபத்து! அதிகாலை ஆபத்து! உஷாராகுங்கள்.

ஊரைத் தாக்க பெரும் படை சூழ்ந்துவிட்டால் இப்படித்தான் மலை ஏறி கூக்குரல் கொடுக்கப்படும். மக்கள் ஓடோடி வந்து கூடிவிடுவார்கள். குறைஷி கோத்திரத்தில் வகை வகையான குடும்பங்கள் உண்டு. ஒவ்வொரு குடும்பத்தையும் பெயர் சொல்லி கூப்பிட்டார்கள் நபிகளார் ﷺ. ஏராளமானோர் திரண்டுவிட்டார்கள்.

நபிகளார் ﷺ கேட்டார்கள்: 'இந்த மலைக்குப் பின்புறம் உள்ள பள்ளத்தாக்கில் குதிரை வீரர்கள் காத்திருக்கிறார்கள் உங்களைத் தாக்குவதற்கு என்று நான் சொன்னால் நம்புவீர்களா?'

نَعَمْ مَا جَرَّبْنَا عَلَيْكَ إِلاَّ صِدْقًا

'ஆம், உங்களை நம்புவோம். உங்களை உண்மையாளராகவே கண்டிருக்கிறோம். பொய் சொல்லி பார்த்ததில்லை.' மக்கள் சொன்னார்கள். இப்போது நபிகளார் ﷺ சொன்னார்கள்:

فَإِنِّي نَذِيرٌ لَكُمْ بَيْنَ يَدَيْ عَذَابٍ شَدِيدٍ

மகா மோசமான வேதனை வருமுன் உங்களை எச்சரிக்கிறேன். எனக்கும் உங்களுக்கும் உள்ள உதாரணம், எதிரிகளைப் பார்த்த ஒருவன், அவர்கள் தன்னை முந்திச் சென்று தனது கூட்டத்தைத் திடீரெனத் தாக்கிவிடக் கூடாது என்பதற்காக மலை உச்சியில் ஏறி 'யா ஸபாஹா!' என்று கூக்குரல் எழுப்பியவன் போல...

3

குறைஷிகளின் கொலைவெறி


✳

மதீனாவாசிகளே! கொஞ்சம் பொறுங்கள்.

இவர் அல்லாஹ்வின் தூதர். இவரை இவருடைய ஊரிலிருந்து வெளியேற்றி அழைத்துச் செல்வதால் முழு அறபு இனத்தையும் பிரிய வேண்டும்; நம்மில் மேன்மக்கள் கொல்லப்படலாம்; நம்மை எதிரிகளின் வாட்கள் வெட்டி வீழ்த்தலாம்; இந்த அனைத்தையும் தெரிந்து கொண்டுதான் நாம் பயணம் செய்து வந்திருக்கிறோம் என்பது தெரிந்த விசயமே. ஆனால், இப்போது நான் உங்களுக்குச் சொல்லவருவது என்னவெனில், இந்தச் சோதனைகளை உங்களால் சகிக்க முடியுமென்றால் இவரை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். அதற்குரிய கூலியை நிச்சயம் அல்லாஹ் உங்களுக்குக் கொடுப்பான். ஒருவேளை உங்களது உயிரைப் பற்றிய பயம் உங்களுக்கு இருந்தால் இப்போது இவரை இங்கேயே விட்டுவிடுங்கள். அல்லாஹ் உங்களை மன்னித்துவிடலாம்.' — அஸ்அது இப்னு ஜுராரா ﵁. இவர் நபிகளார் ﷺ கையைப் பிடித்துக்கொண்டு இப்படிப் பேசினார்.

'அஸ்அதே! உன் கையை எடு. அல்லாஹ்வின்மீது சத்தியமாக! நபிகளாரிடம் ஒப்பந்தம் செய்வதிலிருந்து பின்வாங்கமாட்டோம்; அதை ஒருக்காலும் முறிக்கவும் மாட்டோம்.' இது மதீனாவாசிகள். 'உண்டில்லை பார்த்துவிடுவோம்.. இந்த நபிக்காக, இந்த அழகிய முன்மாதிரிக்காக, இஸ்லாமுக்காக எங்களிடம் இருப்பதையெல்லாம். உயிருடன் சேர்த்து தியாகம் செய்ய இப்போதே தயார்.' தெளிவான முடிவுடன் பேசினார்கள் மதீனாவாசிகள். 'அல்லாஹ்வின் தூதரே! எந்த விசயங்களுக்காக நாங்கள் உங்களிடம் ஒப்பந்தம் செய்ய வேண்டும்?' கேட்டார்கள் அவர்கள். நபிகளார் ﷺ சொன்னார்கள்:

மக்கா – மதீனா ஹிஜ்ரத் வரைபடம்



©UPô & ©wÚô (ö£ôxÁôÚ £ôØu)

- - - - - - - | ¤P Íô° ﷺ ö\ßÓ £ôØu - - - - - -

1

மதீனா பள்ளிவாசல்

✳

‘வேடிக்கை மட்டுமல்ல, அது ஒரு வழிகேடு!
நம் நபியே வேலை செய்யும்போது
அதை வேடிக்கை பார்ப்பது
வழிகேடு! வழிகேடு!!’

மஸ்ஜிது நபவீ பள்ளிவாசல் கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டிருக்கும்போது இப்படிக் கவிபாடினார்கள் நபித்தோழர்கள். ஹிஜ்ரீ 1. மதீனாவில் நுழைந்ததும் முதல் வேலையாக நபிகளார் ﷺ செய்தது, பள்ளிவாசலைக் கட்டுவதுதான். இரண்டு அநாதைகளிடம் விலைக்கு வாங்கினார்கள் அதற்குரிய நிலத்தை.

‘இல்லை, அல்லாஹ்வின் தூதரே! இந்த நிலத்தை உங்களுக்கு அன்பளிப்பாகத் தருகிறோம்’ என்று அவர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். நபிகளார் ஏற்கவில்லை. கட்டிட வேலைகள் தொடங்கின. நபிகளார் ﷺ கல், மண் சுமந்தார்கள். கட்டினார்கள். இதைப் பார்த்துதான் தோழர்கள் அந்தக் கவிதையைப் பாடினார்கள்.

மக்களோடு மக்களாய் கல், மண் சுமந்த அழகிய தலைவரை, முன்மாதிரியை எங்குதான் பார்க்க முடியும்? இன்றோ ஒரு மரக் கன்றை ஊன்றிவிட்டு, கொடியை நட்டுவிட்டு, அடிக்கல் நாட்டிவிட்டு கைத்தட்டல் கேட்கிறார்கள் தலைவர்கள். நற்பணிகள் என்ற பெயரில் போலித்தனமாகப் புகழைச் சம்பாதிக்கிறார்கள். மனசு தொட்டு விசாரித்துப் பாருங்கள். இவர்கள் கல், மண் சுமக்க வேண்டாம். குறைந்தபட்சம், போக்குவரத்துக்குக் கட்டுகிற பாலத்தின் கல், மண்ணில் ஊழல் பண்ணாதிருந்தால் பெரிது அல்லவா?

4

உஹூது களத்தில் சோதனை

*

ஹிஜ்ரீ 3. திரும்பவும் படையெடுத்து வந்துவிட்டார்கள் குறைஷிகள். உஹூது போர்க்களம். குறைஷிகளிடம் கூட்டுப்படையாக 3000 பேர்; ஒட்டகங்கள் 3000; குதிரைகள் 200; கவச ஆடைகள் 700.

முஸ்லிம்களோ வெறும் 700 பேர். இதில் 50 பேரைத் தேர்வு செய்து தற்காப்புத் திட்டம் ஒன்றை நபிகளார் ﺹ தீட்டினார்கள். அம்பெறிவதில் வீரர்களான இந்த ஐம்பது பேரும் கனாத் பள்ளத் தாக்கின் வடதிசையில் உள்ள மலையில் நின்றுகொண்டு முஸ்லிம் களைப் பாதுகாக்க வேண்டும். 'எதிரிகளின் குதிரைப் படை எங் களை நெருங்காதபடி அம்பெறிந்து அவர்களைத் தடுங்கள். அவர் கள் எங்களுக்குப் பின்புறத்திலிருந்து வந்துவிடக் கூடாது. போர் நமக்குச் சாதகமோ, பாதகமோ உங்கள் இடத்தில் நிலையாக இருங்கள். நாங்கள் கொல்லப்படுவதைப் பார்த்தாலும், எங்களுக்கு உதவ வராதீர்கள். நாங்கள் வெற்றியுடன் பொருட்களைச் சேக ரிப்பதைப் பார்த்தாலும், எங்களுடன் இணைந்துவிடாதீர்கள்..' சொல்லி வைத்தார்கள் நபிகளார் ﺹ அந்த ஐம்பது பேருக்கு.

மழை பெய்தால் மண்வாசனை வருமே? அதுபோல் முஸ்லிம் களுக்கு வெற்றி வாசனை கமகமக்கத் தொடங்கியது. குறைஷிகள் இரத்த வாடையில் செத்துக்கொண்டிருந்தார்கள். இப்போதுதான் மாபெரும் தவறு நடந்தது. 'இதோ, வெற்றிப்பொருள்! இதோ, வெற் றிப்பொருள்! உங்கள் தோழர்களுக்கு வெற்றி. இதற்குப் பிறகும் எதை எதிர்பார்க்கிறீர்கள்?' அம்பெறி வீரர்கள் ஐம்பது பேரில் சிலருக்கு இப்படி உலக ஆசை தொற்றியதில், சுமார் நாற்பதுக்கும் அதிகமானோர் மலையிலிருந்து இறங்கி, எதிரிகள் விட்டோடிய செல்வங்களைப் பொறுக்க ஆரம்பித்தார்கள். தளபதி அப்துல்லாஹ்

7

மக்கா வெற்றி

✳

‘குறைஷிகளே! நான் உங்களிடம் எப்படி நடந்துகொள்வேன் என நினைக்கிறீர்கள்?’

‘நல்ல முறையில் நடந்துகொள்வீர்கள். நீங்கள் எங்களுக்குச் சிறந்த சகோதரர்; எங்களின் சிறந்த சகோதரரின் மகன்.’

فَإِنِّي أَقُولُ كَمَا قَالَ أَخِي يُوسُفُ : {لاَ تَثْرِيبَ عَلَيْكُمُ الْيَوْمَ يَغْفِرُ اللَّهُ لَكُمْ وَهُوَ أَرْحَمُ الرَّاحِمِينَ}

‘நபி யூசுஃப், தம் சகோதரருக்குச் சொன்னதைப் போன்றே நான் உங்களுக்குச் சொல்கிறேன். ‘இன்று உங்கள் மீது எந்தக் குற்றமும் சுமத்தப்படாது. அல்லாஹ் உங்கள் குற்றங்களை மன்னிப்பானாக. அவன் கருணையாளர்களிலெல்லாம் மகா கருணையாளன்.’ உங்களை அறவே பழிக்கப்படாது. நீங்கள் மன்னிக்கப்பட்டவர்கள். நீங்கள் போகலாம்.’ (அந்நசாயீ அல்குப்ரா 11234)

ஹிஜ்ரீ 8இல் மக்காவை வெற்றிகொண்டார்கள் நபிகளார். அப்போது கஅபா வாசலுடைய நிலைப்படியைப் பிடித்தபடி நின்றுகொண்டு குறைஷிகளிடம் அவர்கள் உரையாடிய பேச்சுதான் இது.

ஹுதைபிய்யா ஒப்பந்தம் இருக்க, மீண்டும் யுத்தமா? ஆம், யுத்தம் செய்யத்தான் புறப்பட்டார்கள் நபிகளார். காரணம், ஒப்பந்தத்தை மீறிவிட்டார்கள் குறைஷிகள்.

‘நபியவர்களுடன் சேர விரும்பியவர்கள் நபியவர்களுடன் சேர்ந்துகொள்ளலாம்; குறைஷிகளுடன் சேர விரும்பியவர்கள் குறைஷிகளுடன் சேர்ந்துகொள்ளலாம். யார் எந்தக் கூட்டத்துடன் சேருகிறார்களோ, அவர் அந்தக் கூட்டத்தில் ஒருவராகக் கணிக்

1

இவ்வளவு பரிசுத்தமான முன்மாதிரியா!

*

- நபிகளார் ﷺ ஒரு முழுமையான வழிகாட்டி
- சுத்தம், சுகாதாரத்தில் சின்ன சின்ன விசயங்களுக்கும் வழிகாட்டினார்கள்
- வாய்மையுடன், வாய் சுத்தத்தையும் வலியுறுத்தினார்கள்
- தூய்மையாக இருப்பதை முஸ்லிமுக்குக் கடமையாக்கினார்கள்

‘மலஜலம் கழிக்கும் முறை உட்பட அனைத்தையுமே உங்கள் நபி போதிக்கிறாராமே?’ — நபித்தோழர் சல்மான் அல்ஃபாரிசீ ؓ அவர்களிடம் கேட்டார்கள் கேலியாக.

‘ஆம், மலஜலம் கழிக்கும்போது தொழுகைத் திசையை முன்னோக்க வேண்டாம்; வலது கையால் சுத்தம் செய்யக் கூடாது; மூன்றைவிடக் குறைவான கற்களால் சுத்தம் செய்யக் கூடாது; காய்ந்த கெட்டிச்சாணத்தாலோ எலும்பாலோ சுத்தம் செய்யக் கூடாது என்றெல்லாம் எங்களை நபிகளார் ﷺ தடுத்தார்கள்.’ — பெருமிதத்துடன் பதில் சொன்னார்கள் சல்மான். (முஸ்லிம் 437) இதென்ன, மலஜலம் கழிப்பதற்குக் கூடவா ஒழுக்கம் போதிப்பார் இறைத்தூதர்? ரொம்ப விநோதமான சங்கதிதான். வித்தியாசமாகப் பார்த்தார்கள் கேள்விப்பட்டவர்கள். பளிங்குக் கல் பதித்த பாத்ரூமையும், சீனா மண்ணில் தயாரான வழுவழு டாய்லெட்டையும் புழங்கிக்கொண்டிருக்கும் இக்கால மக்களுக்கே இது ஆச்சரியம் என்றால், ஆயிரத்து நானூறு வருடங்கள் முன்பு வாழ்ந்தவர்கள் ஆச்சரியப்பட்டதில் ஆச்சரியமே இல்லை.

- மூக்கிற்கு நீர் செலுத்தி சிந்துவது,
- முகம் முழுதும் கழுவுவது,
- முழங்கைகள் வரை இரண்டு கைகளையும் கழுவுவது,
- தலையை ஈரக் கையால் தடவுவது,
- இரண்டு கால்களையும் கணுக்கால்கள் வரை கழுவுவது (புகாரீ 140, 159)



2

இவ்வளவு கவர்ச்சியான முன்மாதிரியா!

✳

- தோற்றத்தை அழகுபடுத்துவதை நபிகளார் தம் வழிமுறையாக்கினார்கள்
- தலைமுடி முதல் காலணிகள் வரை கவனம் செலுத்தினார்கள்
- சுத்தமான, நல்ல ஆடை அணிவது, நறுமணம் பூசுவது நபிகளாருக்குப் பிடிக்கும்
- அரவாணித்தனம் நபிகளாரால் சபிக்கப்பட்டது

அண்ணலாரைச் சந்திக்க தோழர்கள் சிலர் வீட்டுவாசலில் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைச் சந்திக்க போகும் முன், வீட்டில் இருந்த தண்ணீர் பாத்திரத்தில் முகத்தைப் பார்த்து தம் தாடியையும் தலை முடியையும் சீர்படுத்திக்கொண்டார்கள் அண்ணலார்.

'அல்லாஹ்வின் தூதரே! நீங்களா இப்படிச் செய்கிறீர்கள்?' ஆயிஷா ﵂ கேட்டார்கள்.

'ஆம்! தம் சகோதரர்களைச் சந்திக்க போகிறவர், தம்மை அதற்குத் தயார்படுத்திக் கொள்ளட்டும். நிச்சயமாக அல்லாஹ் அழகானவன்; அவன் அழகாக இருப்பதை விரும்புகிறான்.' சொன்னார்கள் அண்ணலார் ﷺ. (தஃப்சீர் குர்துபி 7/197)

சிலரைப் பார்த்திருப்பீர்கள். அலங்கோலம், பரட்டைத் தலை, குப்பென்று வீசும் வியர்வை வாடை இவைகளின் குத்தகை மனிதர்களாக திரிந்துகொண்டிருப்பார்கள்.

3

இவ்வளவு ஆரோக்கியமான முன்மாதிரியா !

*

- ஆரோக்கியமான சமுதாயத்தை நபிகளார் விரும்பினார்கள்
- உண்பது, உறங்குவதில் நடுநிலை பேணச் சொன்னார்கள்
- தற்காப்பு கலைகள் கற்கச் சொன்னார்கள்
- நோயுற்றால் மருந்துண்ணச் சொன்னார்கள்; மருத்துவக் குறிப்புகளும் சொன்னார்கள்

டோஸ்: 1

அபூகைஸ் .

இந்த நபித்தோழர் வெயிலில் நின்றபடி அண்ணலாரின் சொற் பொழிவைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த அண்ணலார், 'வெயிலில் நிற்க வேண்டாம், நிழலின் பக்கம் ஒதுங்குங்கள்' என்று கட்டளையிட்டார்கள். (அல்அதபுல் முஃப்ரத் 1174)

டோஸ்: 2

இரண்டு மகன்கள் தங்கள் தோள்களில் தாங்கிக்கொண்டிருக்க, அவர்களிடையே தொங்கியபடி கால்கள் பூமியில் இழுபட வந்து கொண்டிருந்தார் ஒரு முதியவர்.

'இவருக்கு என்ன ஆனது?' அண்ணலார் கேட்டார்கள்.

'கஅபா வரை நடந்து செல்வதாக இவர் நேர்ச்சை செய்திருக்கிறார்.' பதில் சொன்னார்கள் மக்கள்.

4

இவ்வளவு கலகலப்பான முன்மாதிரியா !

- நபிகளார் ﷺ மிக எதார்த்தமானவர்கள்;
- புன்னகை புரிவார்கள்; இனிமையாகப் பேசுவார்கள்
- நளினமாக அணுகுவார்கள்
- குழந்தைகளிடமும் தோழமை காட்டுவார்கள்

ஜைது இப்னு ஸாபித் ரழி.

குர்ஆனை ஒன்றுதிரட்டும் பொறுப்பை ஏற்ற நபித்தோழர். இளைஞர். புத்திக்கூர்மை ஆனவர். அவரிடம் ஒரு கூட்டத்தார் வந்தார்கள்.

'அல்லாஹ்வின் தூதருடைய செய்திகளை எங்களுக்குத் தெரிவியுங்களேன்..?' கேட்டார்கள் அவர்கள்.

'நான் உங்களிடம் எந்தச் செய்திகளைத் தெரிவிப்பேன்? நான் நபிகளாருக்கு பக்கத்து வீட்டுக்காரன். அவர்களுக்கு வஹ்யி[43] இறங்கினால் எனக்கு ஆளனுப்புவார்கள். நான் வஹ்யியை எழுதிக்கொள்வேன்.

- நாங்கள் உலகப்பேச்சைப் பேசினால் எங்களோடு அவர்களும் சேர்ந்து பேசுவார்கள்.
- நாங்கள் மறுமையைப் பற்றி பேசினால் அவர்களும் எங்க ளோடு சேர்ந்து பேசுவார்கள்.

---

43 வஹ்யி – விசேஷமாக இறைவனுக்கும் தூதருக்கும் இடையே நடக்கும் செய்திப் பரிமாற்றம்; இறைச்செய்தி.

கேள்வி: 1

நபிகளார் ﷺ வீட்டில் நடந்துகொள்ளும் விதம் எப்படி?

*

‘வீட்டில் தங்கும் நேரத்தை மூன்று பாகமாக பிரித்துக்கொள்வார்கள் நபிகளார் ﷺ.

அல்லாஹ்வுக்காக ஒரு பாகம்.

குடும்பத்தாருக்காக ஒரு பாகம்.

தமக்காக ஒரு பாகம்.

தம் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கிய பாகத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றை மக்களுக்காக ஒதுக்குவார்கள். அந்நேரத்தில் அங்குப் போகிறவர்கள், தாம் கேட்ட விசயங்களை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவார்கள். அதில் எதையும் அவர்கள் மறைக்கமாட்டார்கள்.

மக்களுக்கு ஒதுக்கிய நேரத்தில், மார்க்கத்தில் அதிக ஞானம் பெற்று சிறப்புப் பெற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். அவர்களில் ஒரு விசயத்தைக் கொண்டு வருபவர்களும் உண்டு. இரண்டு விசயங்களைக் கொண்டு வருபவர்களும் உண்டு.

சிலர் பல விசயங்களைக் கொண்டு வருவார்கள். அவற்றை நபிகளார் கவனமாகக் கேட்டு முடிப்பார்கள். பின்னர், அவர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்தரும் விசயங்களில் ஈடுபடச் செய்வார்கள். உதாரணமாக, மார்க்கச் சம்பந்தமாக கேள்வி கேட்பது. மார்க்கத்தில் அவர்களுக்குத் தேவையான செய்தியைச் சொல்வது.

நபிகளார் ﷺ சொல்வார்கள்: இங்கு வந்திருப்பவர்கள் இங்கு வராதவர்களுக்கு எடுத்துச் சொல்லட்டும். பிரச்சினைகளை என்னிடம் சொல்ல முடியாதவர்களின் விசயங்களை என்னிடம்

கேள்வி: 4

நபிகளார் ﷺ தம் நண்பர்களுடன் எப்படி நடந்துகொள்வார்கள்?

✳

‘நபிகளார் எப்போதும் இன்முகத்தோடும் நற்குணத்தோடும் எளிமையான சுபாவத்தோடும் இருப்பார்கள். கடுகடுத்தவர்களாகவோ, இறுகிய மனம் படைத்தவராகவோ இருக்கமாட்டார்கள்.

கூச்சலிடுவது, கெட்ட காரியம் செய்வது, அடுத்தவரிடம் குற்றம் கண்டுபிடிப்பது, அடுத்தவர்களை அதிகம் புகழ்வது அல்லது அதிகம் கிண்டல் செய்வது, கஞ்சத்தனம் இவையெல்லாம் அவர்களிடம் இருந்ததில்லை. அவர்களுக்கு விருப்பமில்லாத பேச்சுகளைக் கவனிக்காமல் விட்டுவிடுவார்கள். சண்டையிடுவது, பெருமையடிப்பது, வீண்பேச்சு இந்த மூன்றை விட்டும் தம்மைத் தடுத்துக்கொள்வார்கள். இதுபோல் இம்மூன்றிலிருந்து மக்களையும் விலகிக்கொள்ளச் செய்வார்கள்.

யாரையும் கேவலமாகப் பேசமாட்டார்கள். அடுத்தவரைப் பற்றி புறம் பேசமாட்டார்கள். அடுத்தவர்களின் குறைகளைத் தேடித் திரியமாட்டார்கள். நன்மை தரும் விசயங்களைத் தவிர வேறு எதையும் பேசமாட்டார்கள்.

நபிகளார் ﷺ பேசினால் அவர்களின் நண்பர்கள் அவர்களது தலையில் பறவைகள் அமர்ந்திருப்பதுபோல் அசையாது அமைதியாய் இருப்பார்கள். நபிகளார் ﷺ பேசி முடித்து அமைதியான பிறகு பேசுவார்கள். அவர்கள் முன்னிலையில் சண்டையிட்டுக் கொள்ளமாட்டார்கள்.

நபிகளார் ﷺ முன்னிலையில் யாரும் பேசத் தொடங்கினால், அவர் முடிக்கும் வரை அமைதியாய் இருப்பார்கள். முந்தியவரிடம்

உண்மையான உதாரண புருஷர்

يَا مَعْشَرَ الشَّبَابِ مَنِ اسْتَطَاعَ الْبَاءَةَ فَلْيَتَزَوَّجْ فَإِنَّهُ أَغَضُّ لِلْبَصَرِ وَأَحْصَنُ لِلْفَرْجِ وَمَنْ لَمْ يَسْتَطِعْ فَعَلَيْهِ بِالصَّوْمِ فَإِنَّهُ لَهُ وِجَاء

'இளைஞர் சமுதாயமே! உங்களில் இல்லறம் நடத்த சக்தி பெற்றவர் திருமணம் செய்துகொள்ளட்டும். அது தீய பார்வையைக் கட்டுப்படுத்தும்; கற்பைக் காக்கும். அதற்கு இயலாதோர் நோன்பு நோற்றுக்கொள்ளட்டும். ஏனெனில் நோன்பு, இச்சையைக் கட்டுப்படுத்தும்.' (புகாரீ 5066)

திருமணத்தை இப்படி வலியுறுத்தியது மட்டுமின்றி, கட்டுப்பாடே இல்லாமல் பலதாரமணம் செய்து வந்த ஆண்களுக்கு அவர்கள் அதிகபட்சம் நான்கு பெண்களைத்தான் திருமணங்கள் செய்ய வேண்டும் எனவும் வரம்பை விதித்தார்கள்.

எச்சரிக்கை! இந்த அனுமதி பொத்தாம் பொதுவாக எல்லா ஆண்களுக்கும் உரியதல்ல. நீதி தவறாத இறையச்சம் உள்ளவர்களுக்கே உரியது. இது நம்மால் முடியுமா என்று பயப்படுபவர்கள், இருக்கும் ஒரு மனைவியோடே இல்லறம் செய்ய வேண்டும்.

இரண்டு, மூன்று அல்லது நான்கு என்று பெண்களை மணமுடித்தவர் தம் மனைவிகளுக்கு மத்தியில் நீதியாக நடப்பது கட்டாயம். நேரம், பொருளாதாரம் இந்த இரண்டையும் தம் மனைவிகளுக்குச் சமமாக பங்கிட வேண்டும்.

ஒருவருக்கு அதிகமாகவும், இன்னொருவருக்குக் குறைவாகவும் பங்கிட்டு அநியாயம் செய்யக் கூடாது. இவ்விசயத்தில் தம்மால் நீதியாக நடக்க முடியும் என்ற தைரியம் அவசியம்.

ஏனோ தானோ என்று விளையாட்டுப் போக்கில் இதைச் செய்கிறவன் வினையைச் சம்பாதித்துக்கொள்வான். விபத்திற்குள்ளாவான். இவ்வுலகத்தில் அவனது நிம்மதி நாசமாகும். அநியாயக்காரனான அவனை மனைவிகள் வெறுப்பார்கள்.

நடுவே மனைவி அழுது கொண்டு இருப்பதைப் பார்க்கும் கணவருக்கு எரிச்சலாக இருக்கும். 'உனக்கு நேரங்காலம் தெரியாதா..?' என்றபடி சிடு சிடுவென பாய்வார்கள்.

நபிகளாரோ அக்காலத்து பயணச் சிரமங்களுக்கு மத்தியிலும் நிதானமாக, மனைவியின் கண்ணீரைத் துடைத்துவிட்டு ஆறுதல் சொன்னார்கள். இது கணவன் மனைவி பிரியத்தைப் பெருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியுமா என்ன..?

கோப தாபம் புரிந்து நடந்தார்கள்

மனைவி எந்த நேரத்தில் என்ன மூடில் இருக்கிறாள்? கோபமா, தாபமா? இப்போது இதைச் சொன்னால், இப்படிச் செய்தால் அதற்கு அவளின் ரியாக்சன் எப்படி இருக்கும்?

அவள் விரும்பியதை வாங்கித் தர முடியவில்லை. அதை அவளுக்குப்புரிய வைக்க சரியான சந்தர்ப்பம் எது? அல்லது அவளின் தவறைச் சுட்டிக்காட்ட தகுந்த சமயம் எது?

— இப்படித் தம்பதியர் ஒருவர் மற்றவரின் சுபாவம் புரிந்து பழகுவது ஒரு சமர்த்தான பண்பு. மனக்கசப்புகள் துளிர்விடாமல் இருக்க இந்தச் சாதுரியம் ரொம்ப அவசியம் தம்பதியருக்கு.

நபிகளார் ﷺ இதிலும் அழகிய எக்ஸ்பெர்ட், வல்லவர். மனைவியின் ஓரிரு வார்த்தைகளை வைத்தே அவளது அந்த நேரத்து சுபாவத்தைக் கிரகித்துவிடுவார்கள். உடனே அந்த நிலைமைக்கு ஏற்ப நடந்துகொள்வார்கள்.

அவர்களுக்கும் ஆயிஷா ரலி அவர்களுக்கும் இடையே நடந்த ஓர் உரையாடலைக் கவனியுங்கள்.

'எப்போது நீ என்னைப் பற்றி திருப்தியுடன் இருக்கிறாய்; எப்போது நீ என்மீது கோபத்துடன் இருக்கிறாய் என்று நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன்..' — நபிகளார்.

'எப்படி நீங்கள் அறிந்துகொள்வீர்கள்?' — ஆயிஷா.